## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**
**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**
**சட்டமன்ற உறுப்பினர்கள் (கோவை கிழக்கு, மேற்கு, தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),**
**பாராளுமன்ற உறுப்பினர்கள் (கோவை மற்றும் நீலகிரி பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 4679 / 2007 / எம்சி. 8 நாள் 20.4.2007**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஏப்ரல் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.**

----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 27.4.2007 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.**

**இணைப்பு : கூட்டக்குறிப்பு**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மைநகல் உத்திரவின்படி/**

**மன்றச் செயலர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**
**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

## 27-4-2007-ம் தேதி மாமன்ற சாதாரணக்  கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும்  உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள், |
| 1. | பொறியியல் பிரிவு - JNNURM – பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டம் - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் -  ஒப்புதல் வழ’கப்பட்டது – தொடர்பாக. |
| 2. | பொறியியல் பிரிவு - JNNURM – ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - கடன் தொகை அனுமதித்தல் - நிபந்தனைகள் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்  - தொடர்பாக. |
| 3 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.72 – பாலமுருகன் நகர் பகுதி – தார்தளம் அமைத்தல் பணி – ரூ 25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.66 – கண்ணப்ப நகர் - நவீன ஆட்டிரைச்சிக் கூடம் கட்டுதல் - ரூ 25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை – உரக்கிட’கு மயானம் - அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ரூ 25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு- மேற்கு மண்டலம் -  வார்டு எண்.56 – சொக்கம்புதூர் குளத்தேரி சாலை –தார்தளம் புதுப்பித்தல் பணி – ரூ 18 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 7. | பொறியியல் பிரிவு- தெற்கு மண்டலம் -  வார்டு எண்.38 – இஸ்மாயில் வீதி – மறுதார்தளம் அமைத்தல்  பணி – ரூ19 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8. | பொறியியல் பிரிவு- தெற்கு மண்டலம் -  உக்கடம் ஆடு அறுவை மனை  அமைத்தல் பணி – ரூ 100 லட்சம் -நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின்  நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | பொறியியல் பிரிவு- மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை – உரக்கிட’கு வளாகம் - எரிவாயு மயானம் அமைத்தல் பணி –  ரூ 100 லட்சம் -நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 10 | நகரமைப்பு பிரிவு - ச’கனூர் கிராமம் க.ச.எண்.535ஸ்ரீ1-20 சென்ட் இடம் - நில உரிமை மாற்றம் செய்தல்  - மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பாக. |
| 11 | பணியமைப்பு - திருமதி எ. ராதா – துப்புரவு பணியாளர் - பொள்ளாச்சி நகராட்சிக்கு மனமொத்த பணி மாறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 12 | பணியமைப்பு -திருமதி வி.கலா – பலநோக்கு சுகாதார பணியாளர் - பல்லாவரம் நகராட்சிக்கு மாறுதல் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்தல் - மாற்று ஏற்பாடு – புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – முடிவு செய்யும்வரை ஏற்படும் செலவினம் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 14 | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - சௌரிபாளையம் கிராமம் - க.ச.எண் 556 1 ஏ முதலியன -32728.46 சதுர மீட்டர் நிலம் - பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவித்தல்  - மாமன்ற ஒப்புதல் - தொடர்பாக. |

பொருள் எண் : 1

கோவை மாநகராட்சிக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நகர்புற அபிவிருத்தி அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்புக்குழு கீழ்கண்ட இரு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | பில்லூர் குடிநீர்த் திட்டம் | ரூ. 113.743 கோடி |
| 2. | திடக்கழிவு மேலாண்மை | ரூ. 96.51 கோடி |

மேற்கண்ட இருதிட்டங்களுககும் ஒப்புதல் வழங்கப்பட்ட கடித எண் Q-12045/23/4 JNNURM /05 – CPHEEO – நாள் 1-03-2007 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பதிவு செய்யலாம். ந.க.எண் 8251/05/எம்.டி.3.

மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 27.04.07

அலுவலகக்குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

பொருள் எண் : 2

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கான மான்யம் மற்றும் கடனுதவி வழங்குவது பற்றி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் தனது கடித எண் TUFIDCO/JNNURM AM(M)/2007 நாள் 23-03-2007 தேதியில் மொத்த மதிப்பீடு ரூ. 9651.00 இலட்சத்தில் வட்டியில்லா கடன் 20 விழுக்காடு ரூ. 1930.20 இலட்சமும் மான்யம் 50 விழுக்காடு ரூ.4,825.50 இலட்சமும் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனை கீழ்க்கண்டவாறு கொடுத்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்ட பங்கு | | திருப்பிச் செலுத்துவற் கான காலம் | மாநகராட்சியின் பங்கு 30 சதவீதம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் 20 சதவீதம் ரூ. இலட்சத்தில் | மானியம் 50 சதவீதம் ரூ. இலட்சத்தில் | | |
| 1 | ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை | 9651.00 | 1930.20 | 4825.50 | 7 வருடம் | 2895.30 |

கோவை மாநகராட்சிக்கு ரூ. 1930.20 இலட்சம் ( வட்டியில்லா ) கடனுதவியும் மற்றும் மான்யம் ரூ. 4825.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 6755.70 இலட்சதத்தினை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் வழங்க குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று மன்றத் தீர்மானம் கோரப்பட்டுள்ளதால் இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள் விபரம்

1) கோவை மாநகராட்சி ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 9651.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தி கூருகுஜனுஊடீ நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 1930.20 இலட்சம் வட்டியில்லா கடனாகவும் , ரூ. 4825.50 இலட்சம் மான்யமாகவும் பெற மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

2) கோவை மாநகராட்சி ஆணையர் இந்த கடன் மற்றும் மான்யம் பெற தேவையான அனைத்து ஆவனங்களில் கையொப்பம் இட அதிகாரம் வழங்கப்படுகிறது.

3) கடனை திரும்ப செலுத்தும் அட்டவணைப்படி கடனை திருப்பிச் செலுத்தலாம்.

4) இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி கால அட்டவனை பின்பற்றப்படும்.

5) இக்கடனை திரும்பச் செலுத்துவதற்கு மாநகராட்சியின் வரவு செலவு திட்டத்தில் உரிய ஒதுக்கீடு செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. கடன் முழுவதையும் உரிய காலத்தில் தவறாமல் செலுத்த உரிய சுழல் நிதி ஏற்படுத்தப்படும்.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 13087/2006/எம்.டி3.

மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 27.04.07

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

பொருள் எண் : 3

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 7 வார்டு எண் 72க்குட்பட்ட பாலமுருகன் நகர் பகுதிக்கு புதிதாக தார்தளம் அமைக்க வேண்டி மாமன்ற உறுப்பினர் மற்றும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளார்கள். மேலும் இச்சாலை மண் சாலையாக உள்ளதாலும் இப்பகுதிக்கு தார் சாலை அமைக்க வேண்டி உள்ளது. எனவே இப்பணிக்கு ரூ. 25,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 2368/07/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

பொருள் எண் : 4

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் 5 வார்டு எண் 66-ல் உள்ள கண்ணப்ப நகரில் மாநகராட்சி காலியிடத்தில் நவீன ஆட்டிறைச்சி கூடம் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 4579/07/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 27.04.07

பொருளில் குறிப்பிட்டுள்ள நவீன ஆட்டிறைச்சிக் கூடத்தினை வடக்கு மண்டலத்தில் வேறு இடம் தேர்வு செய்து அமைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் : 5

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை உரக்கிடங்கு மயானத்திற்கு நடைபாதை , மின் விளக்குகள் , சுற்றுச்சுவர் , கழிப்பிடம் , காத்திருக்கும் அறை மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்ய வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 1748/2007/டி1மே)எம்டி.4.

## மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் : 6

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பிரிவு எண் 3 வார்டு எண் 56-ல் உள்ள சொக்கம்புதூர் குளத்தேரி சாலைக்கு தார்தளம் புதுப்பித்து அமைத்தல் - மதிப்பீடு 18,00,000/-க்கு நிர்வாக அனுமதி குறித்து.

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 56க்குட்பட்ட சொக்கம்புதூர் குளத்தேரி சாலைக்கு தார்தளம் புதுப்பித்து அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 18,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு உள்ளது.

மேற்படி இடத்தில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து மோசமாக மேடு பள்ளமாக இருப்பதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூராக உள்ளது. மேலும் மழைக்காலங்களில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு செல்ல பயன் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இங்குள்ள சாலையை புதுப்பித்தல் மிகவும் அவசியமாகிறது.

மேற்படி இடத்தில் சாலைக்கு தார்சாலை புதுப்பித்து அமைக்க வேண்டி மாமன்ற உறுப்பினர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பணிக்கு 2007-2008-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மதிப்பீடு ரூ. 18,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 4120/2007/எம்டி.4.

## மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் : 7

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 38க்கு உட்பட்ட இஸ்மாயில் வீதியில் மறுதார்தளம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 19,00,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் உள்ள சாலை 6 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சாலையில் அதிக அளவில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு அவசியம் கருதியும் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்பவும் மதிப்பீடு ரூ. 19,00,000/-க்க தயரிக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மதிப்பீடு ரூ. 19,00,000/--க்கு நிர்வாக அனுமதி வேண்டி மான்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 3235/07/எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 27.04.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் : 8**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட உக்கடம் பகுதியில் ஆடு அறுவை மனை அமைக்கும் பணிக்கு ரூ. 100 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை , நாள் 11-09-2006 கோவை மாநகராட்சி ஆடு அறுவை மனை அமைக்க ரூ. 10 இலட்சம் பகுதி 2 திட்டத்தில் அரசு மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. கோவை மாநகாட்சியின் 2007-2008-ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் இப்பணிக்கு ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு மானியம் ரூ. 10 இலட்சம் மற்றும் மாநகராட்சி நிதி ரூ. 90 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 100 இலட்சம் செலவில் இப்பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அரசு நிதி உதவியுடன் இப்பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறலாம். ந.க.எண் : 3644/07/எம்டி.4.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 27.04.07**

பொருளில் குறிப்பிட்டுள்ள ஆடுஅறுவை மனை உக்கடம் கழிவுநீர்ப் பண்ணைப் பகுதியில் அமைக்கவும் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் : 9**

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை உரக்கிடங்கு வளாகத்தில் எரிவாயு மயானம் அமைக்க மதிப்பீடு ரூ.100 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் 11-09-2006-ல் கோவை மாநகராட்சிக்கு மின் மயாானம் அமைக்க ரூ. 20 இலட்சம் பகுதி 2 திட்டத்தில் அரசு மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் 2007-2008-ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் மின் மயானத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு மானியம் ரூ. 20 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்து ரூ. 80 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 100 இலட்சத்திற்கு இப்பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அரசு நிதி உதவியுடன் இப்பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறலாம்.

ந.க.எண் : 3561/07/எம்டி.4.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 27.04.07**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் 10

மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் அவர்கள் தமது கடித எண். 57438/பி4/97 நாள் 3.2007 -ம் தேதிய கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி, சங்கனூர் கிராமம், க.ச.எண். 535/1 -ல் உள்ள 20 சென்ட் இடத்தை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகம் கட்ட நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடம், கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 65-ல் ராமசாமி நகர் ரோட்டில் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி, சங்கனூர் கிராமம், நில அளவு எண். 535/1-ல் சங்கனூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 8லும், முழுமைத் திட்டத்தின்படி குடியிருப்பு பகுதியிலும் அமைந்துள்ளது. நில அளவை பதிவுகளின்படி அரசுக்கு சொந்தமான தரிசு நிலமாக (**Assessed Waste - Dry Land)** உள்ளது.

எனவே, மேற்படி சங்கனூர் கிராமம், நில அளவை எண். 535/1 பாகத்தில் உள்ள 20 சென்ட் இடத்தை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட நில உரிமை மாற்றம் செய்வது குறித்த மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு பொருளில் குறிப்பிட்ட இடத்தை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனையில்லை என தீர்மானிக்கலாம்.

எண் 4618/2007/எம்.எச். 5.

### மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள்: பணியமைப்பு – கோவை மாநகராட்சி – திருமதி.எ.ராதா, துப்புரவு பணியாளர் – 47வது வார்டு, மேற்கு மண்டலம் – பொள்ளாச்சி நகராட்சிக்கு மனமொத்த பணிமாறுதல் வேண்டுவது – சம்பந்தமாக.

* * * * * *

கோவை மாநகராட்சி, 47வது வார்டு மேற்கு மண்டலத்தில் துப்புரவு பணியாளராகப் பணிபுரியும் திருமதி.எ.ராதா, என்பவர் தன் குடும்ப சூழ்நிலை காரணமாக பொள்ளாச்சி நகராட்சிக்கு மனமொத்த பணிமாறுதல் வேண்டி விண்ணப்பித்துளளார்.

எனவே, திருமதி.எ.ராதா, துப்புரவு பணியாளர் அவர்களை பொள்ளாச்சி நகராட்சிக்கு மனமொத்த பணி மாறுதலில் செல்ல மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.2862/2007/எம்சி.3.

### மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள்: பணியமைப்பு – பொது சுகாதாரம் – திருமதி.வி.கலா, பலநோக்கு சுகாதாரப் பணியாளர் – இராமநாதபுரம் நகர் நல மையம் – பல்லாவரம் நகராட்சிக்கு மாறுதல் கோருவது – சம்பந்தமாக.

* * * * * * *

கோவை மாநகராட்சி, இராமநாதபுரம் நகர் நல மையத்தில் பலநோக்கு சுகாதாரப் பணியாளராகப் பணிபுரியும் திருமதி.வி.கலா, என்பவர் தனது குடும்ப சூழ்நிலை கருதி பல்லாவரம் நகராட்சிக்கு மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி.வி.கலா, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை பல்லாவரம் நகராட்சியில் காலியாக உள்ள பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதலில் செல்ல மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், பல்லாவரம் நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.2067.2007.எம்சி.3.

### மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண். 13

கோவை மாநகராட்சியில் முறைப்படுத்தப்பட்ட மனைபிரிவுகளுக்கு டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது டேங்கர் லாரி உரிமையாளர்களான திரு. R. A. ராஜேந்திரகுமார் மற்றும் K.S ராமலிங்கம் ஆகியோர் இப்பணியை மேற் கொண்டு வருகின்றனர். இப்பணியை பற்றிய முழுவிபரமும் மாமன்றத் தீர்மான எண் 243, நாள். 30-01-2004-ல் மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டது.

கோவை மாநகராட்சி திட்ட மதிப்பீட்டில் ஆண்டுதோறும் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்காணும் 30-01-2004-ல் மாமன்றத்தில் வைக்கப்பட்ட பொருளில் கூறப்பட்டவாறு 9-12-2003-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும் வரை திருவாளர்கள் K.S ராமலிங்கம் மற்றும் R. A. ராஜேந்திரகுமார் ஆகியோர் மூலமே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதற்கிணங்க இன்று வரை தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஏனெனில் குடிநீர் விநியோகப் பணி அத்தியாவசிய, இன்றியமையாத பணி என்பதாலும் இப்பணியில் ஏதேனும் சுணக்கம் ஏற்பட்டால் அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதாலும் நிலுவையில் உள்ள வழக்கு முடிவு பெறும்வரை தற்போது விநியோகம் செய்துவரும் திருவாளர்கள் K.S ராமலிங்கம் மற்றும் R. A. ராஜேந்திரகுமார் ஆகியோர் மூலமே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கும், புதிய ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகை நிர்ணயம் செய்யும் வரை மாமன்றத் தீர்மான எண் 409, நாள் 5-02-2001-ல் ஒப்புதல் வழங்கியுள்ள விலை விகிதம் பின்பற்றப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்கான செலவுத் தொகைக்கு திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள ரூ ஒரு கோடியில் இருந்து தொடர்ந்து தொகை வழங்குவதற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு 16-12-2005-ல் பொருள் வைக்கப்பட்டதில் மா.ந.ம.தீ.எண் 210 -ல் விரிவான விபரங்களுடன் மீண்டும் பொருள் வைக்க வேண்டுமென கூறி ஒத்தி வைக்க ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினம் மாமன்றக் கூட்டத்தில் கேட்கப்பட்டதற்கு ஏற்ப கீழ்காணும் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள குடியிருப்புத்தாரர்கள் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கப்படாத பகுதிகளில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு லாரி மூலம் வாரம் ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அந்த பகுதியில் செயல்பட்டு வரும் குடியிருப்பு நல சங்கங்களின் தலைவர் மற்றும் சம்மந்தப்பட்ட குடியிருப்பில் உள்ள சிலரிடம் கையொப்பம் பெறப்பட்டு லாரி மூலம் குடிநீர் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சம்மந்தப்பட்ட பகுதி குடிநீர் விநியோகப் பொறியாளர்களால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு தனியார் லாரிகள் 20 க்கு மேற்பட்டவகைகள் மூலமாக லாரி ஒன்றுக்கு சராசரி தினம் 5 டிரிப்கள் வீதம் சுமார் தினமும் 100 முதல் 120 டிரிப்கள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது விநியோகம் செய்துவரும் திருவாளர்கள் K.S ராமலிங்கம் மற்றும் R. A. ராஜேந்திரகுமார் ஆகியோர் மூலமே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கும், குடிநீர் விநியோகத்திற்கான செலவுத் தொகைக்கு திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள தொகையில் இருந்து நீதிமன்ற வழக்கு முடியும் வரை தொடர்ந்து தொகை வழங்குவதற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற தீர்மான எண் 26 நாள் 26-06-2006-ல் பொருள் வைக்கப்பட்டது. அந்த தீர்மானத்தில் மேலும் தொடர்ந்து ஜுலை , ஆகஸ்ட், செப்டம்பர் , மற்றும் அக்டோபர் 2006 ஆகிய நான்கு மாத காலத்திற்கு தற்போது விநியோகம் செய்து வரும் திருவாளர்கள் கே. எஸ். ராமலிங்கம் மற்றும் ஆர். ஏ. இராஜேந்திரகுமார் ஆகியோர் மூலமே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உயர்நீதிமன்ற வழக்கின் 26-02-2007-ம் தேதிய தீர்ப்பில் ஏதேனும் குறைகள் இருப்பின் உரிய சிவில் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணவும் என தீர்ப்பு வழங்கி வழக்கை தள்ளுபடி செய்துள்ளது என மாநகராட்சி வழக்கறிஞர் திரு. ஆர். சிவகுமார் 26-03-2007-ம் தேதிய கடிதத்தில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நகலுடன் அனுப்பி வைத்துள்ளார். மேலும் உயர்நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட 9-12-2003-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியின் காலக்கெடுவான 90 நாட்கள் முடிவடைந்துவிட்டபடியால் ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகாதா நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரலாம் இந்நிலையில் ஒப்பந்ததாரர் 17-04-2007 அன்று திடீரென லாரி விநியோகத்தை நிறுத்திவிட்டனர் மாற்று ஏற்பாடாக மாநகராட்சி லாரிகள் மூலம் நேரத்தை அதிகப்படுத்தி குடிநீர் விநியோகம் தடைபடாமல் செய்யப்பட்டது.

மேலும் மாநகராட்சியால் வரைமுறை செய்யப்பட்ட 761 மனைப்பிரிவுகளுக்கும் தமிழக அரசு உத்திரவுபடி குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவுபெற்ற பிறகு அப்பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட உள்ளது. அதன்பிறகு லாரி மூலம் விநியோகம் செய்வதை நிறுத்தவோ அல்லது குறைக்கவோ செய்யலாம்.. அவசர அவசியம் கருதி புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அது முடிவு செய்யும் வரை மாற்று ஏற்பாடு செய்யப்படும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 4480/2001/ப.வ.எம்

## மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 27.04.07

மாநகராட்சி லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்வதோடு, தேவையான மனைப்பிரிவுகளுக்கு அடுத்த 6 மாத காலத்திற்கு, ஏற்கனவே இருக்கும் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில், தற்போது குடிநீர் விநியோகம் செய்துவரும் ஒப்பந்ததாரர்கள் மூலமாகவே லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும், 1.11.06 முதல் 30.09.07 வரையுள்ள காலத்திற்கு உண்டாகும் செலவினத்திற்கு அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஆறு மாத காலத்திற்குப் பிறகு மாநகராட்சி லாரிகள் மூலமாக மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

பொருள் எண் 14

திரு ஆர். ரவி, ஹனுதேவ் இன்போ பார்க் (பி) லிமிடெட், சென்னை-32 என்பவர் தனது 23.2.2007-ம் தேதிய விண்ணப்பத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் சௌரிபாளையம் கிராமம் க.ச.எண் 556/1 ஏ, 1 பி, 2ஏ, 557/1, 558/2(ஏ)3, 4(பி), 559/1,2,3 மற்றும் 506/2 –ல் 32788.46 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் 109061.34 ச.மீ பரப்பளவு கொண்ட பேஸ்மெண்ட், தரைத்தளம் மற்றும் எட்டு தளங்களுடன் தகவல் தொழில்நுட்ப பூங்கா (I.T. Park) A, B, C, D கொண்ட 4 பிளாக்குகள் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி இடத்தை பலமாடி வணிய கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும், மேற்படி இடத்தினை வணிக நில உபயோக மாற்றம் செய்யக் கோரியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தல் வார்டு எண் 14 ல் ஹிந்துஸ்தான் கல்லூரி சாலையில் நவ இந்தியா சந்திப்பின் தென்புறம் அமைந்துள்ளது (உடையாம்பாளையம் பகுதி அருகில்). மனுதாரர் மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 20-ல் குடியிருப்பு பகுதியாக அமைகிறது. அம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக 30 அடி அகல சாலை உள்ளது. அரசாணை எண் 260 எச் & யூ.டி. நாள் 29.10.2002-ன்படி, ஆபத்தான, தொழிற்சாலைப் பகுதி மற்றும் விவசாய பகுதி நீங்கலாக அனைத்து நில உபயோக பகுதியிலும் தொழில் நுட்ப பூங்கா அமைக்கலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது. மனையிடம் குடியிருப்பு நில உபயோகத்தில் குடியிருப்பு பகுதியாக அமைகிறது. ஆதலால் நில உபயோகம் மாற்றமின்றி தொழில்நுட்ப பூங்கா அனுமதிக்கலாம். மனுதாரரின் மனையிடம் 32728.46 ச.மீ. பரப்பில் அமைகிறது. மேற்படி இடத்தில் தொழில்நுட்ப பூங்கா கட்டிடம் கட்ட எல்காட் நிறுவனத்தின் ந.க.எல்காட் /ஐபிபிபி /1087/ எப்எஸ்ஜ/ 2007 நாள் 2.4.2007-ன்படி ஆட்சேபனையின்மை சான்றிதழ் மனுதாரரால் பெற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே பலமாடி மற்றும் பொது கட்டிட விதிகள் 1973 விதி 4-ன்படி, மேற்படி இடத்தினை பலமாடி கட்டிடப்பகுதியாக அறிவிக்க மாமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும். பொது கட்டிட விதிகள் 1973 விதி 4-ன்படி மேற்படி இடத்தினை பலமாடி கட்டடிடப்பகுதியாக அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு உரிய வழிமுறைகளின்படி அனுப்பி வைக்கலாம்.

அலுவலகக் குறிப்பு - பொருளில் குறிப்பிட்டுள்ள இடத்தினை பலமாடி வணிக உபயோக கட்டடிடம் (தொழில்நுட்ப பூங்கா உபயோகம் ) கட்டும் பகுதியாக அறிவிக்கக் கோரும் மனுவை அரசுக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் செய்யலாம்.

எண் - 4926/2007/ கி.எச். 1

மாநகர மன்ற தீர்மான எண் 14 நாள் 27.04.07

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி